3. ஒழுங்குப் பிரச்சினைகள்—(தொடர்ச்சி).

(இ) பேரவையில் பயன்படுத்தக்கூடாத சொற்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் உறுப்பினர் அவர்கள் ** ஒரு வார்த்தையை உபயோகித்தார்கள். ஏற்கெனவே, சட்ட மன்றத்தில் அந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய தீர்ப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். நமது சட்டப் பேரவையின் 235-வது விதியின்படி, இந்த அவையிலே பேசுகிற பேச்சுக்கள் சட்ட மன்றத்தில் பயன் படுத்தக் கூடாத சொற்களாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல, 235-வது விதியின்படி பார்த்தால், அவதூறான சொற்களையும் பயன் படுத்தக் கூடாது. அதோடு, ஆபாசமான சொற்களையும் பயன் படுத்தக் கூடாது. அது மட்டுமல்லாமல் கண்ணியமற்ற சொற்களையும் பயன்படுத்தக் கூடாது. அதுதான் விதி. மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறிய சொல் கண்ணியமற்றதாக இருப்பதால் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. டி. மார்ட்டின்: நேர்மையான பதிலாகக் கருத முடியாது என்று கூறிக்கொண்டு, அது ஊமையர் கையில் சொல்லும் பதில் போலக் காட்சி அளிக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு சாத்தான்குளம் பகுதியைப் பொறுத்தமட்டில், அது மணற்பாங்கான பாலைவனப் பிரதேசம் போன்று காட்சியளிக்கிறது. அங்கே விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு பயிர் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கே உள்ளவர்களிடத்தில் கொள்முதல் செய்யும்போது ஐந்து ஏக்கர்கள் உள்ளவர்களிடம் கொள்முதல் செய்யாமலிருந்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு டவுன் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும் ரேஷனைப் போன்று மைனர் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கவேண்டும். அவைகளுக்குள் பாகுபாடு காட்டாமல் ரேஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சாத்தான்குளம் தொகுதியில் உடன்குடி பகுதியில் பார்த்தால், சிமெண்ட் கான்க்ரீட் பேஸ்மெண்ட் போட்டு வயலுக்குத் தண்ணீர் பாயக்கூடிய அளவில் பயிர் செய்து வருகிறார்கள். ஏராளப் பணம் செலவு செய்து பம்ப் செட்டுகள் அமைத்து வைத்திருக்கிறார்கள். இன்னும் அவைகளுக்கு மின்சார வசதி செய்து

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.